May 22, 2011

Resolutions of the Cabinet Meeting chaired by the Honble Chief Minister

செய்தி வெளியீடு எண்: 289 நாள்: 22/5/11

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 16.5.2011 அன்று பொறுப்பேற்ற புதிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் முதல் அமைச்சரவைக் கூட்டம் இன்று (22.05.2011) புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள அமைச்சரவைக் கூட்ட அரங்கில் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

அமைச்சரவைக் கூட்டத்தில், முதல் தீர்மானமாக, தமிழக மக்கள் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற, தமிழக மக்களின் வாழ்வு வளம் பெற, மாண்புமிகு புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் மீது நம்பிக்கை வைத்து, மாண்புமிகு புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில் ஆட்சி அமைவதற்கு வாக்களித்த அனைத்து மக்களுக்கும் தமிழக அமைச்சரவை தனது நன்றியைத் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

மேட்டூர் அணையிலிருந்து குறித்த காலத்தில் தண்ணீர் திறந்து விடப்பட்டால் குறுவைப் பாசனத்திற்கு உதவிகரமாக இருக்கும் என்ற காவேரி டெல்டா பாசன விவசாயிகளின் வேண்டுகோளை கருத்தில் கொண்டும், மேட்டூர் அணையில் நீர் இருப்பதையும், இயல்பான தென்மேற்கு பருவ மழையை எதிர் நோக்கியும், காவேரி நடுவர் மன்றத்தின் ஆணைப்படி நீர்வரத்து வரபெறும் என்பதைக் கருத்தில் கொண்டும், காவேரி டெல்டா பாசன விவசாயிகள் குறுவைப் பாசனத்தை உரிய காலத்தில் மேற்கொள்வதற்காக, மேட்டூர் அணையிலிருந்து ஜுன் 6 ஆம் தேதி தண்ணீர் திறந்து விட அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. நாடு குடியரசு ஆன பின் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படும் நாளான ஜுன் 12 ஆம் தேதிக்கு முன்னதாக தண்ணீர் திறந்து விடப்படுவது இது தான் முதன் முறை என்பது குறிப்பிடத் தக்கது. இன்று நடைபெற்ற முதல் அமைச்சரவை கூட்டம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த முடிவை எடுத்துள்ளது.

தற்போது நடைமுறைப்படுத்த உள்ள சமச்சீர் கல்வி, மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் வகையில் அமையவில்லை. தற்போதைய சமச்சீர் கல்வி பாடத்திட்டம் ஒட்டுமொத்த கல்வித் தரத்தை உயர்த்த வழிவகை செய்யாது.

எனவே, சமச்சீர் கல்வி முறை அமல்படுத்த வேண்டும் என்றும், ஆனால் அதே நேரத்தில் எவ்வாறு கல்வித் தரத்தை உயர்த்துவது என்பது குறித்து ஆராய வல்லுநர் குழு ஒன்றை அமைக்கவும் அமைச்சரவை முடிவெடுத்துள்ளது. எனவே, இந்தக் கல்வி ஆண்டில் பழைய பாட புத்தகங்களையே பின்பற்றலாம் என்றும், பாட புத்தகங்களை அச்சிட சிறிது கால அவகாசம் தேவைப்படும் என்பதால் பள்ளிகளை ஜுன் 15 ஆம் தேதி திறக்கலாம் என்றும் அமைச்சரவை முடிவெடுத்தது.

இதைத் தவிர, ஆளுநர் உரையில் இடம்பெற வேண்டிய அரசின் கொள்கைகள் குறித்தும் அமைச்சரவையில் முடிவுகள் எடுக்கப்பட்டன.

******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9
நாள் : 22.05.2011